IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.
O.S.NO:34/2013

**DEP OF WITNESS: PW1** NAME: Dharaniammal Date:06.08.2019

**7 முதல் 11 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-**

நான் பேங்களூரில் 15 வருடமாக உள்ளேன். நான் திருமணமானது முதல் பேங்களூரில் தான் வசித்து வருகிறேன். எனக்கு 1978-ம் வருடம் திருமணம் நடைபெற்றது. எனது தகப்பனார் ரங்கநாத முதலியார், எனது தாயாரின் பெயர் சந்திரம்மாள். என்னுடன் பிறந்த சகோதரர்கள் பன்னீர்செல்வன் மற்றும் மகேந்திரன். என்னுடன் சேர்த்து பெண் பிள்ளைகள் 4 பேர்கள். 1 ரமணி, 2-வது நான், 3-வது விமலா, 4-வது கீதா ஆகியோர்கள் ஆவோம். கீதா இவ்வழக்கில் முதல் பிரதிவாதி. 1986 வருடத்தில் எனது அப்பாவிற்கு தாவா சொத்து பாகபிரிவினையின் மூலம் கிடைத்ததா என்று எனக்கு தெரியாது. பாகபிரிவினை பத்திரத்தினை பற்றி எனக்கு தெரியாது. 30.04.1986-ம் தேதியிட்ட பாகபத்திரத்தின் அடிப்படையில் எனது அப்பாவிற்கும், அம்மாவிற்கும் பாத்தியப்பட்ட சொத்தை பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்துக்கள் தற்போது வீட்டு மனைகளாக உள்ளது. தாவா சொத்துக்கள் கமலாபுரம் கிராமத்தில் உள்ளது. 24.04.1991-ல் எனது அப்பாவிடமிருந்து நான் தாவா சொத்தினை கிரயம் வாங்கியதாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது போன்று எனது அப்பாவிடமிருந்து எவ்வித கிரயமும் வாங்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. 30.04.1986 பாகபத்திரத்தின் அடிப்படையில் எனது அப்பாவிற்கும் அம்மாவிற்கும் கிடைத்த பொதுவான சொத்து என்பதால் எனது அப்பா மட்டும் எனக்கு கிரயம் எழுதி கொடுக்க இயலாது என்றும் அவ்வாறு எழுதிகொடுத்ததாக எடுத்துக்கொண்டால்கூட அது செல்லாதது என்று சொன்னால் சரியல்ல. எனது அப்பாவிடமிருந்து நான் வா.சா.1 ஆவணத்தின் மூலம் 25 செண்ட் இடம் வாங்கினேன். இன்றைய தேதி வரையில் தாவா சொத்திற்கான பட்டா எனது பெயரில் வாங்கவில்லை. தாவா இடத்திற்கு அருகில் ஜெயகுமார் என்பவரது நிலம் உள்ளது. 24.04.1991 வா.சா.1 பத்திரம் சட்டப்படி செல்லாது என்பதால் அதன் அடிப்படையில் நான் எவ்வித உரிமையும் கோர இயலாது என்றால் சரியல்ல.வா.சா.1 ஆவணத்தில் 25 செண்டிற்கு 4 பக்கம் சொத்து விவரம் சொல்லிதான் வாங்கப்பட்டுள்ளது. இன்று வரையிலும் தாவா சொத்திற்குண்டான சர்வே எண்ணிற்கு உட்பிரிவு ஏற்படவில்லை என்றால் தெரியவில்லை. சர்வே எண்.176/4-ல் மொத்தம் 1 ஏக்கர் 77 செண்ட் ஆகும். நான் கிரயம் பெற்றதாக சொல்லக்கூடிய 25 செண்டிற்கு 4 எல்லைகள் என்ன என்று குறிப்பிட்டு சொல்லி வழக்கில் சொத்து விவரம் தெரிவிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கில் 4 எல்லை விவரம் தெரிவிக்காமல் தெரிவித்துள்ளதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 4 எல்லைகள் குறிப்பிடாமல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்பதால் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. வா.சா.1 ஆவணத்தை என் அப்பாவிற்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்ற

விவரத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரதான். தாவா சொத்து எனது அப்பாவிற்கு பரம்பரை சொத்தாக கிடைத்தது. பரம்பரை சொத்து என்பதால் எனது சகோதரர்கள் சகோதரிகளுக்கு உரிமை உள்ளதா என்றால் உரிமை உள்ளது. அதன் அடிப்படையில் பார்த்தால்கூட நான் வாங்கிய கிரயம் செல்லாது என்று சொன்னால் சரியல்ல. பாகபிரிவினை பத்திரத்தை எனது சகோதரர்களுக்கு சொத்து கொடுத்தார் எனது சகோதரிகளுக்கு சொத்துக்கள் கொடுக்கவில்லை. பாகபிரிவினை பத்திரத்தில் எனது தந்தையாருக்கு ஒதுக்கப்பட்டதாக சொல்லக்கூடிய சொத்தை தான் நான் பணம் கொடுத்து வாங்கியதாக சொல்கிறேன் என்றால் சரிதான். 30.04.1986 பாகபிரிவினை பத்திரத்தில் பெண்களுக்கு பாகம் கொடுக்கவில்லை என்று நாங்கள் பாக வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை. இன்றளவிலும் எனது அப்பா பாகபிரிவினை பத்திரதின் மூலம் எனது சகோரர்களுக்கு கொடுத்துவிட்டார் என்றும் சகோதரிகளுக்கு கொடுக்கவில்லை என்று ஆட்சேபணை செய்யவில்லை. முதல் பிரதிவாதியான எனது சகோதரி கீதாவிற்கும் எனக்கும் எவ்வித சண்டையும் இல்லை. எனது அம்மாவும் அப்பாவும் சேர்ந்து 1-வது பிரதிவாதி கீதாவிற்கு ஒரு சொத்தினை 20.04.2006 தானமாக கொடுத்தார்கள் என்றால் சரிதான். அந்த சொத்தும் பாகபிரிவினையில் அவருக்கு கிடைத்த சொத்தை தான் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த பத்திரத்தினை ஆட்சேபணை செய்து வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தானசெட்டில்மெண்ட் மூலம் கீதாவிற்கு கிடைத்த சொத்தை 26.05.2008-ல் 2 கிரய பத்திரங்கள் மூலம் 2-வது பிரதிவாதிக்கு கிரணம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். 2-வது பிரதிவாதி ஜெயகுமாருக்கு அந்த சொத்தை பொறுத்து ஒரு அதிகார பத்திரம் எழுதிகொடுத்தார் என்றால் சரிதான். அந்த ஜெயகுமார் அந்த சொத்தை பொறுத்து அப்புறுவல் வாங்கி லேஅவுட் போட்டு சொத்துக்களை விற்றார் என்றால் சரிதான். அவர் 50 - 60 நபர்களுக்கு மனை போட்டு விற்றார் என்றால் சரிதான். 50 - 60 நபர்களை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை. ஜெயக்குமார் மனைகள் போட்டு விற்றவுடன் நான் போய் கேட்டேன். அவர் ஒத்துவராததால் தான் நான் இந்த வழக்கினை தாக்கல் செய்தேன். ஜெயக்குமார் 50 - 60 நபர்களுககு விற்ற சொத்து சம்மந்தப்பட்டவர்களை இவ்வழக்கில் நான் தரப்பினர்களாக சேர்க்காமல் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்து தாராபாய் பெயரில் வருவாய் ஆவணங்கள் மாற்றம் செய்யப்பட்டது என்றால் சரிதான். 22.07.2013-ல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வில்லங்க சான்றிலேயே ஜெயகுமார் விற்பனை செய்த நபர்களின் பெயர் விவரம் கண்டுள்ளது என்றால் தெரியாது. நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மேற்படி வில்லங்க சான்றில் யார்யாருக்கு தாவா சொத்துக்கள் ஜெயகுமாருக்கு விற்கப்பட்டது தெரிந்தும் வழக்கில் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்களில் 85% மேல் மேற்பட்ட சொத்துக்களை 2010 முதல் 2012 வரை உள்ள காலகட்டத்திலேயே ஜெயகுமார் பலநபர்களுக்கு

விற்றுவிட்டார் என்றால் தெரியாது. ஜெயகுமார் தற்போது உயிருடன் இல்லை. 7 முதல் 11 நபர்கள் ஜெயகுமாரின் வாரிசுகள். நான் ஜெயகுமாரிடம் போய் கேட்டதாக சொல்லும் காலகட்டத்தில் ஜெயகுமார் தாவா சொத்தினை வீட்டு மனை போட்டுவைத்திருந்தார். ஐயப்பன் நகர் என்கின்ற ஜெயபுரம் என்கின்ற பெயரில் தான் வீட்டு மனைகள் போட்டிருந்தார் என்றால் சரிதான். வீட்டுமனைகளாக போட்டபிறகு தான் இவ்வழக்கை தாக்கல் செய்தேன். வழக்கு சொத்தினை நீதிமன்ற கட்டணத்திற்காக வேண்டி விவசாய நிலம் என்று காண்பித்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.1 கிரய பத்திரம் செல்லத்தக்கதல்ல என்பதால் அதன் அடிப்படையில் நான் உரிமை கோர இயலாது என்பதால் வழக்கை தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. வா.சா.1 ஆவணம் உண்மையானது அல்ல என்றும் அது எனது தகப்பனாரால் உண்மையில் எழுதிகொடுகப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.1 அடிப்படையில் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. வா.சா.1 ஆவணம் இதுவரையிலும் நடைமுறைக்கு வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கிற்கு உரிய நபர்களை தரப்பினர்களை சேர்க்காத காரணத்தினாலும் இவ்வழக்கு காலதோஷத்தால் பாதிக்கப்பட்ட காரணத்தினாலும் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. வழக்கு முதல் விசாரணை ஆகியவற்றில் நான் சொல்லியுள்ள சங்கதிகள் பொய்யானவை என்றால் சரியல்ல.

**<u>4 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

4முதல் 6 பிரதிவாதிகள் இவ்வழக்கிற்கு தேவையற்ற நபர்கள் என்பதால் இவ்வழக்கை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over of the deponent and acknowledged by her/him to be correct.

Sd/. A.CHELLAPANDIAN,
DISTRICT MUNSIF.